நாவலர்பெருமான் குருபூசைச் சிறப்பிதழ்
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.
உ
வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.
பிரதி விலை: சதம் 10.
ஆரம்பம் : விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356
புத் ௮0] யாழ்ப்பாணம்:- கீலக ௵ கார்த்திகை மீ உக உ வெள்ளிக்கிழமை (6-12-1968) [இல- ௩௫

சிவநெறியும் செந்தமிழும் உய்ய

சைவர்களுக்குரிய இலக்கணம்

சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச் சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய் இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய், குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவ தீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய், விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம, ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபம், சிவத்தியானம, சிவாலயசேவை, சிவலிங்க பூசை குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை முதலியவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்.

(திருத்தொண்டர் பெரியபுராணவசனம்.)

x x x

யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே!

உங்களிடத்துள்ள அன்புமிகுதியினாலே நான் சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவ தீட்சை பெற்றும் என்னை! விபூதி, ருத்திராக்ஷ தாரணம் பஞ்சாட்சர செபம் சிவாலய தர்சனம இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! .... நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும் புண்ணிய பாவங்களையும அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிபடும்முறைமையையும அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை உங்கள் கோயில்களிலே சிவபத்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேத பாராயணம் தேவார திருவாசக பாரா

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

அவதரித்த
நாவலர் பெருமான்

அன்னார் அருளிய நல்லுரைகள்

நல்லறிவுச்சுடர்!!

சைவ சமயிகளே!

“மங்கலியத்தைக் தரித்துக் கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகஞ்செய்த இல்லொழுக்கிறந்த பெண்டிர்கள்போல, விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக் கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமானோடு பசுக்களைச் சமமெனக் கூறியும் சிவவாக்காகிய சிவாகமங்களை நிந்தித்தும், அச்சிவபெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக் கூசுவர்கள்! ஐயையோ! இச்சிவத்துரோகிகளை நம்முடைய சைவசமயிகள் வணங்குதலும், இவர்களுக்குத்தாம் வருந்தித் தேடியபொருள்களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலும் எவ்வளவு அறியாமை!

சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்திலும் சாதிஅதிகமெனக்கொள்வது சுருதி யுக்தி அநுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம். சிவாகமங்களை நிந்திப்பவரும் சிவசரியை கிரியை முதலியவைகளினாலே பொருள் தேடி உடம்பை வளர்ப்பவர்களும். அப்பொருளைப்பாசத்தாருக்குக்கொடுத்து இன்புறுவோர்களும். கோயிலதிகாரிகளாய்த் தேவத்திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப்பொருட்டு, ஆசாரியாபிஷேகம் முதலியன செய்துடையவர்களும், விருத்திப்பொருட்டுச் சிவவேடம் தரித்தவர்களும், விருத்திப்பொருட்டுத், துறவறம் பூண்டோர்களும். சிவஞானநூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும், பதிதர்களுள் (பஞ்சம சாதி அல்லது நீச சாதி) அடங்குவர்கள்.

சாக்கிய நாயனார் பௌத்த சமயத்தைத் துறவாமல் அவ்வேஷத்தோடு சிவலிங்க ஆராதனை செய்து திருவருட்பேறு பெற்றவர். பரமசிவனது திருவருள் கூடுதலால், அறிவிக்க அறியும் சித்தாகிய ஆன்மாக்களும், அவ்வான்மாக்களினாலே செய்யப்படுஞ் சடமாகிய புண்ணியம், பாவம், என்னும் கர்மங்களும், அக்கர்மங்களாலே பெறப்படுஞ் சுகம், துக்கம், என்னும் பலங்களும, அப்பலங்களைக் கொடுக்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

“விநாயகன் தாள் வணங்கி வாழ்வாம்”

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ஒருசமயம் ஒரு நல்ல சுபமுகூர்த்த வேளையில், காசிவாசி செந்திநாதையர் அவர்கள், விநாயகக் கடவுள் மீது ஒரு தோத்திரம் சொல்ல வேண்டுமென்று, தம் குருவாகிய நாவலர் பெருமானை வேண்டுதல் செய்தார்கள்.

உடனே கரங்கள் சிரமேற் குவிய நாவலர் பெருமானின் அருமைத் திருவாயிலிருந்து,

‘சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாகமங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்கள் நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடை மௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த அறிவு இச்சை தொழில் என்றேத
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்

என்ற தோத்திரம் உதயஞ் செய்தது. தோத்திரத்தில் சைவசமய வளர்ச்சியின் படிக்கிரமமும் அதனாலெய்தும பயனும் அமைந்திருத்தல் கண்டு, ஐயர் அவர்களின் கண்களில ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

நாவலர் பெருமானின் அறிவு இச்சை செயல்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் சைவ வளாச்சியின் வண்ணமாயே அமைந்திருந்தன.

நாவலர் பெருமானின் சிந்தனைகள் பயன் செய்யும் முறையில், அப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குவோமாக.

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.
MILK WHITE VMK SOAP
மில்க்வைற்
மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்

நியம மந்திரங்கள்

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் இவ்வைந்தும் அருட்பாவெனப் பெயர் பெற்று சைவத்துக்கும் சிவபூசைக்கும் சிவாலய நித்திய நைமித்திகங்களுக்கும் சிவதரிசனத்துக்கும் அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாய் இருக்கும். இவ்வாறு தருக்கோவையாருண்மையிலே சொல்லப்பட்டது.

— போலியருட்பாமறுப்பு.
திரட்டியவர்:
“பருளாய்விநாயகன்”

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

கீலகஞு கார்த்திகைமீ உக-உ வெள்ளிக்கிழமை [1968]

நாவலர் கருத்தை நிறைவேற்றுபவர்கள் யார்?

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிவெளியிட்ட வித்தியாசாலை விக்கியாபனங்கள் ஒன்றில் கீழே காணப்பெறும் பந்தியைச் சைவ மக்களுடைய சிந்தனைக்காகச் சமர்ப்பிக்கின்றோம்.

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக் கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ் தலந்தோறும வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவர்கள் ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாக்கி இலக்கணவிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும கற்பித்தல் வேண்டும், அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்"

நாவலர் பெருமான் இப்பந்தியிலுள்ள கருத்தை நிறைவேற்றும நோக்கத்துடனேயே சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையையும் தாபித்தனர். இக்காலம் இவ்விரு வித்தியாசாலைகளிலும் ஊட்டப்படும் கல்விமுறையும் அவ்வித்தியாசாலைகளிற் கல்வி பயிலும் மாணவர்களுடைய சமயவொழுக்கமும் நாவலர்காட்டிய நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாகவில்லை. அவ்வித்தியாசாலைகளை நாவலருடைய நோக்கத்தின்படி நிருவகிக்க வேண்டியவர்களிடத்தில் இப்பொழுது அவருடைய கருத்தை நிறைவேற்றக்கூடிய அதிகாரமுமில்லை. இலங்கை அரசாங்கம் சகல வித்தியாசாலைகளையும தேசியமயமாக்கியபின் வித்தியாசாலைகளில் கற்பிக்கும் கல்விமுறை அரசாங்கத்தாராலேயே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்பொழுது நமதுநாட்டுக் கல்வித் திட்டத்தின்படி வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேயே நாவலருடைய பாலபாடங்களும் சமயபாடப் புத்தகங்களும் கற்பிக்க இடமில்லை. அவ்வித்தியாசாலையிலே தகுதியுள்ள பிள்ளைகளைப் பரீக்ஷை செய்து தெரிந்தெடுத்து அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து நாவலருடைய விக்கியாபனத்தில் காட்டப்பட்டிருக்கும கல்வித் திட்டத்தின்படி கல்விகற்பித்து உபாத்தியாயர்களையும் சைவப் பிரசாரகர்களையும் உண்டாக்கவுமிடமில்லை. நாவலர் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கென தரும சாதனஞ் செய்யப்பட்ட சொத்துக்களின் வருவாய் இத்தகைய தொண்டிற்கே தேடப்பெற்றவை நாவலருடைய கருத்தை நிறைவேற்றி வைப்பது சைவ மக்களுடைய இன்றியமையாத கடமை. இக்கட்டுரையில் அநுவதிக்கப்பட்டிருக்கும் பந்தியைப் படிக்கும் ஒவ்வொரு சைவனும உள்ளந் துடித்து நாவலருடைய கருத்தை நிறைவேற்றக்கூடிய வழி வகைகளைத் தேடுதல் வேண்டும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு ஆறுமுகநாவலர் தர்ம பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, கொழும்பு இந்து மாமன்றம் போன்ற இந்துசமயச் சபைகளும், நமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும், வேறு தனிப்பட்ட சைவப்பெரியார்களும் இதனைப்பற்றிச் சிந்தனைசெய்து வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலர் திருவுள்ளப்படி கல்வி பயிற்றக்கூடிய வழி வகைகளை வகுப்பார்களாக.

நாவலர் பெருமான் ஞானபாநு

புலவர்சிகாமணி, பண்டிதர் பிரம்மஸ்ரீ வ.மு. இரத்தினேசுவரஐயர்

உலகம் அறிஞர்களால் பிரகாசிக்கும், நமது நாடு காலந்தோறும் பேரறிஞர்களைத் தந்து வருகின்றது. சமயமும் தமிழும் இருகண்கள். கற்றோர்க்கு மூன்று விழி என்பர்.

சேர, சோழ பாண்டியர்கள் கல்விக களஞ்சியங்களாக விளங்கினர் யாழ்ப்பாணமும் பரதேச ஆட்சியிலும் தமிழின் மாட்சி குன்றவில்லை. நாவலரவர்கள் தமிழ் ஆங்கிலம், சம்ஸ்கிருதம் (வடமொழி) ஆகிய பல மொழிகளிலும் சிறந்த ஞானவரோதயர். கிரிதீபம் போல எங்கும் நாவலர் நாமம் பேசப் பேச ஒளி திகழும்.

சமயமும் மொழியும் இருகண்களாகப் பரிபாலித்த ஐந்தாங் குரவரைத் தேசாபிமானி என்பது அறியார் கூற்று சமயநூல்கள் அரிய புராணாதிகள் இலக்கண வகை ஆதியன நாவலரவர் செவ்விது ஆராய்ந்து அளித்த பெரும் பாக்கியமே தமிழராகிய எங்களுடைய வற்றாத சங்க நிதியாகும். ஆகவே, தற்காலப் படிப்பில் சமய ஒழுக்கமில்லை. கீழ்ப்படிவு இல்லை, வீபூதிப்பூச்சு வேண்டாம். பின் எது வேண்டாம், எல்லாரும் மனிதர் எல்லாரும் ஒன்றுதான். இப்படி எண்ணக் கேடுதான் விளையும். பேச்சும பல சைவப் பிரசங்கமும் மாறி வருகின்றது சிவாலயத்தில் ராமாயண ப்டலம், பாரதப் போதனை, இவைகளுள் ஏற்றனநாடி, நாவலரவர்களின் திருவுருவம் நகரமத்தியில் பொலிவதே சாலச் சிறப்பாகும். நீருநம் வேணியன் நாமம் பொலிந்த கற்பகதருவாகிய சமயபாநு நாவலர் பெருமானருள் வளர்க. செந்தமிழ் ஓசை பொலிக.

சுபம்

நாவலர் நினைவு விழா

யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 10, 11-12-68 திகதிகளில் ஆறுமுகநாவலர் குருபூசைவிழா சிறப்புறக்கொண்டாடப்பெறும்.

வடமாநில கல்வி ஆலோசகர் திரு. K. கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கதம்ப நிகழ்ச்சி, இசைச் சித்திரம், சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெறும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "நாவலரது ஐந்தாண்டுத் திட்டம்" என்னும் பொருள்பற்றி ஓர் ஆய்வுரை வழங்குவர்.

x x

சிதம்பரத்தில்

சிதம்பரம் நாவலர் உயர்நிலைப்பள்ளியில் இம்மாதம 11-ஆம் திகதி மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலபிள்ளை அவர்களின் தலைமையில் நாவலர் விழா சிறப்பாக நடைபெறும். இவ்விழாவில் யாழ். சைவ பரிபாலனசபை உபதலைவர் சிவ. உ. சோமசேகரம் அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவர் எனத் தெரிகின்றது.

சிவ புண்ணியங்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சென்னபட்டணத்திலுள்ள காலத்தில் தொண்டை நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் இலமாயிருந்தபடியால் அவற்றை ஜீர்ணோத்தாரணஞ் செய்தற்குப் பொருள் சேர்க்க விரும்பிச் சென்னபட்டணத்திலுள்ள சிவபத்திமான்களிற் பலர் திருத் தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையொன்றினை நாவலர் அவர்களை அக்கிராசனாதிபதியாகக் கொண்டு நிறுவினர். அச் சபையினது தலைவராக அவர் சிவபுண்ணியத்தின் பெருமையைப் பற்றிப் பிரபல நியாயங்களுடன் பிரசங்கங்கள் நிகழ்த்தினர். அங்ஙனம நிகழ்த்தப்பட்ட ஒரு பிரசங்கத்தின் ஒரு பகுதி கீழே அநுவதிக்கப்பட்டிருக்கின்றது.

இறைவனூற் பயன்:

தமக்கினிமை வஞ்சகரே
தாந்தாமுதற் சாரார்
தமக்கினியார் தம்முதற்சார்ந்தார்

இத் திருக்குறள் தமக்குத் தாம் வஞ்சகராவார் இவரென்பதும், இனியவராவார் இவரென்பதும் உணர்த்துகின்றது. இதன் பொருள் தமக்கு இனிமை தாம் வஞ்சகர் தம முதற் சாராரே — தங்களுக்கு இனிமையாயுள்ளத்திலே தாங்களே வஞ்சகர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரையடையாதவர்களே, தமக்கு இனியார்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடைந்தவர்களே எ—று. தாமென்றது பசுக்களாகிய ஆன்மாக்களை தம முதலென்றது பதியாகிய சிவபெருமானை -இனிமை-இன்பம்.

துன்பத்தில் வெறுப்பும் இன்பத்தில் விருப்பும் ஆன்மாக்களுக்கு இயற்கையேயாயினும அவர்கள் இன்பம் இது துன்பம் இது, துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் பெறு நெறி இஃது என உள்ளபடி அறிதற்கும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்திர சத்தியுடையர்களல்லர். சுதந்திரர் சிவபெருமானே. ஆன்மாக்களோ பரதந்திரர்கள். ஆன்மாக்கள் இவ்வுண்மையை அறிந்து சிவபெருமானது திருவருள் வழிபட்டொழுகினன்றி இன்ப துன்பங்களை அறிதலுந் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தைப் பெறுதலும் இடலாவாம். நித்தியமாகிய பேரின்பம் முத்தியின்பமொன்றே மற்றையின்பங்களெல்லாம் முட்பூவிற்றேன்போலாம்.

சிவபெருமானை அடைதலாவது அவரை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல். அவ்வழிபாட்டுக்கு மிகமேலாகிய கருவி சிவஞானம் இவ்வழிபாடே முத்திக்குவாயில். சிவஞானம் ஏழு பகுதிகளையுடையது. அவையாவன: அத்துவ சுத்தியாகிய நிருவாண தீக்ஷை பெற்றுக்கொண்டு சிவஞான நூல்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களை ஓதல் ஓதுவித்தல், அவற்றின் பொருளைக் கேட்டறிதல் கேட்பித்தல கேட்டதைச் சிந்தித்தல், சிந்தித்ததைப் பின்பு தெளிதல் தெளிந்தபடியே அதன்படி நிட்டைகூடல் என்பனவாம்.

இச் சிவஞானத்துக்கு ஏதுக்கள் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களாகிய பதிபுண்ணியங்களாம். பதிபுண்ணியமெனினும் சிவபுண்ணியமெனினுமொக்கும். ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட யாக முதலியவை பசுபுண்ணியங்களாம். ஞானம், யோகமின்றியும் யோகம் கிரியையின்றியும கிரியை சரியையின்றியும் சித்தியாவாம். அது

விரும்புஞ் சரியையதன்
மெய்ஞான நான்கு
மரும்புமலர் சாய்கனிபோ
லன்றோ பராபரமே"

—தாயுமானவர்.

சிவ நெறியும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யணம் சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்கின்றீர்களில்லை

—யாழ்ப்பாணச் சமயநிலை
(1872)

தமிழ்ப் புலமை

தமிழ் கற்றவர்களை நடுவுநிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க் கல்வியில வல்லவர்களும், வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகிறார்கள். (1860)

வேதாரணியம் - இராமேசுவர ஆலயங்கள்

பாண்டிநாட்டுள்ள இராமேசுரத்துச் சிவாலயம் யாழ்ப்பாணத்தரசராலே கட்டப்பட்டதென்பது அவ்வாலயத்துக் கர்ப்பக்கிருகத்துச் சிலா சாசனத்தில் தெளியப்படும். சோழநாட்டுள்ள வேதாரணியத்துச் சிவாலயம் யாழ்ப்பாணத்துத் தில்லைநாத தம்பிரானாலே கட்டப்பட்டதென்பதும, அவர் தஞ்சாவூர் மகாராசாவுடைய புத்திரனுக்கு வீபூதி சாத்தி நோய் நீக்கியருளியமை பற்றி அம்மகாராசாவினாலே கோடிக்கரையில் உப்பளமும் கோடிக்கரை தோப்புத்துறைகளில் ரேகுச் சுங்கமும், பல வயனிலம தோட்டங்களும அவ்வாலயத்தின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டன வென

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B 7925

சபாரத்தினம் கைம் பெண் நல்லம்மா, ஊரெழு மேற்கு,
சுன்னாகம் —வழக்காளி
இல. M. B. 7925 எதிராக
1. அம்பலவாணர் முதலியாரும் 2. பெண் பதுமாவதியும்
இருவரும்: சித்தங்கேணி, வட்டுக்கோட்டை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7925-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1969-ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 6-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய். 2982/21 சதமும் 10-1-66 தொடக்கம் 23-12-66 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 335/25 சதமும். 3.2 67ல் கொடுபட்ட ரூபாய் 2000- குறைக்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோயில் பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "சமரவிலக்கை" நெற்செய்கை நிலப்பரப்பு 12½. (Lms P.C) எல்லை: கிழக்கு கதிரேசர் பொன்னம்பலத்தின் பிள்ளைகளின் காணி; வடக்கு: அம்பலவாணர் செல்லத்துரையின் உரித்தாளரின் காணி; மேற்கு: கீழ்ச் சொல்லப்படும் 2ம் காணி தெற்கு: வறுநீயின்படி, அம்பலவாணர் வேலுப்பிள்ளையின் காணி இதுமுழுவதும். (E 265/168 ல் கீழ் பதியப்பட்டது.)

2. மேற்படி இறைகாணி "சமரவிலக்கை" நெற்செய்கை நிலப்பரப்பு 7 (Lms P C) எல்லை கிழக்கு: மேலேசொல்லப்பட்ட 1ம் காணி; வடக்கு: அம்பலவாணர் செல்லத்துரையின் உரித்தாளரின் காணி; மேற்கு: வைத்தீஸ்வரன் கோவிலுக்குரிய ஆதனம். தெற்கு: சபாபதி இராசையாவின் காணி. இதுமுழுவதும் (277/164ன் கீழ் பதியப்பட்டது)

173, குருசோ வீதி, க. சரவணமுத்து
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொம்மிஷனர் & விலை மதிப்பாளர்
29—10—68 எம். 294 6—12—

கோட்டு விற்பனவு விளம்பரம்

தம்பிப்பிள்ளை பொன்னம்பலம், 83, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம், —வழக்காளி
இல. M B, 5961 எதிராக
முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு 36, பெரியகடை
யாழ்ப்பாணம், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 5961-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1969-ம் ஆண்டு மாசி மீ 10-ம் உ (10-2-69) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 27 000-ம் 15-8-63 தொடக்கம் 5-4-65 வரைக்கும் ரூபாய் 25000-க்கு 8 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 540-73.

காணி விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென் கிழக்கிறை "பதிரியடி" உள்ளதும் மலாயன் கபே என்றழைக்கப்படும் கட்டிடத்தில் முன் பகுதியும் பதிவு எண் D. 259/128. எல்லை, கிழக்கும் வடக்கும் எதிராளிக்குரிய மலாயன் கபே என்றழைக்கப்படும் காணிப்பகுதிகளும். மேற்கு பரமசாமிச் செட்டியார் கனகசபை செட்டியாருக்குரிய ஆதனம் தெற்கு ரோட்டு.

14. டேவிற் வீதி அ. போ. எதிர்மனசிங்கி
யாழ்ப்பாணம் கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
30-11 68, எம் 293, 6-12-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

இல. M. B 8128
1 பிருன்சிஸ்பிள்ளை செல்லப்பு
2 பெண் மங்கைநாயகி, வசாவிளான்
—வழக்காளிகள்
எதிராக
காத்திகேசு செல்லன் பலாலி
—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டகோட்டின் M B 8128-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி, கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1969-ம் ஆ. தை மாதம் 16-ந் திகதி (16-1-1969) வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக ரூபா 1612/50 சதமும் இன்னும் 29-4-1966 தொடக்கம் 19-10-1967 வரைக்கும் 1250/- ரூபாவிற்கு நூறிற்கு 12% வட்டி கூட்டிக் கூட்டிய தொகைக்கு 19-10-1967 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும், செலவு ரூபா 290/37 சதமும் (ஏற்பட்ட செலவு 199/50, வெளியாக்குச்செலவு 44/87 இனிமேலேற்படுஞ்செலவு 46/-).

ஆதன விபரம்

(1) வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, மயிலிட்டி கோவிற்பற்று, பலாலியிறை "வரபுலம்" பர. நில. லா. 4½. இதற்கெல்லை கிழக்கு முதலித்தம்பி நாகமுத்துவும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு கணபதி காக்கையனினுதனம், வடக்கு, நடராசா பெண் சிவக்கொழுந்துவுக்கும் பங்காளருக்குரியவாதனம், தெற்கு கபிரியல் இஞ்ஞசியினுதனம் இது முழுவதும் தென்மேற்குப்பக்கமாக விருக்கும் கிணற்றிற் பங்கும், தூர்வைப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்

(2) டி. இறை "வரபுலம்" பர. நில. லா. 4, எல்லை கிழக்கு முதலித்தம்பி நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு கபிரியல இஞ்ஞசியினுதனம், மேற்குப் பிரதான வாய்க்கால், தெற்கு கணபதி காக்கையனினுதனம். இது முழுவதும், தென்மேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றுப்பங்கும், தூர்வையுரித்தும், வழிவாய்க்கால் பாவிப்புருத்தும், கிணற்றிறைக் கிட்ட நிற்கும் இரண்டு தென்னைமரங்கள் நிந்தமாகவும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். M 296 6-12-68
22—11—68.

நல்லறிவுச் சுடர்!

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற, தானே அறியுஞ் சித்தாகிய பதியும் எனப் பொருள்கள் நான்கு என்றும் அவைகளைப் பூர்வோத்தர விரோதமின்றி யதார்த்தமாக உணர்த்தும் நூல் சைவசமய நூலே என்றும், அந் நூல் உணர்த்தும் பதி பரமசிவனே என்றும் அறிந்து கொண்டார்.

"செய்வானுஞ் செய்வினையும் அதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையான் நான்கும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறியல்லவற்றிக் கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென்றருளாலே யுணர்ந்தறிந்தார்"

(ஆன்மா இல்லையென்ற சமயங்களும், இறைவன் இல்லை என்ற சமயங்களும், ஆவியும் தேகமேவ சிவனும் ஒன்றுகுமே என்ற மாயவாதச் சமயங்களும் உள்ளன)

சைவசமயிகளே! நீங்கள் இவ் வுண்மைகளெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து சிவபெருமானிடத்தும், உண்மை நாயன்மார் இடத்தும் சிவாகம விதிப்படி பத்தி செய்து ஒழுகக்கடவீர்கள். இவ்வுண்மை நிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களுக்கு, நல்லறிவுச் சுடர் கொளுத்தக் கடவீர்கள் அது கூடாவதாயின் அவர்கள் செய்யும் சிவாகம நிந்தை, குரு நிந்தை, சங்கம நிந்தை முதலியவற்றைக் கேட்டு எரிவாய் நரகத்துக்கு இரையாகாவண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்து விடக்கடவீர்கள். இப்படிச்செய்யாது மதிமயங்கி அவைதிபாதகர்களைப் பெரியோர்களெனக் கொண்டு வழிப்பட்டொழுகுவது பாவம்! பாவம்!!"

"மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த்து" (மணிவாசகர்)

[நாவலர் பெரியபுராண வசன நூலில் இருந்து பிரதி செய்து வெளியிட்டவர்:— அ சபாபதிப்பிள்ளை, (உபதலைவர் இந்து வாலிபர் சங்கம் நாவலப்பிட்டி]

சிவ நெறியும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதும், அக்காலமுதல் இக்காலம் வரையும் அவ்வாலயத்துக்குத் தருமகர்த்தாக்களாயுள்ளோர் யாழ்ப்பாணத்துள்ள சைவாசாரியர்களே என்பதும் இந்தச் சைவாசாரியர்கள் சோழ தேசத்துச் சைவாசாரியர்களோடு போசன முதலியவற்றுற் கலப்புடையவர்களென்பதும் சிலாசாசனம் தாமிசாசன முதலியவைகளினாலே தெளியப்படும்.

நல்லறிவுச் சுடர் கொளுத்தல்

இது நல்ல சமயம்

உங்கள்பிரதிநிதியாகிய ஸ்ரீ குமாரசுவாமிக்குத் தெரியும்; புதுக் கவர்ணருக்கு எப்படித் தெரியும்! பத்திரிகைக்காரர்களுக்குத் தெரிந்தது என்னை! அவர்கள் இன்னும் ஓலமிடுகிறார்கள்! வேறே யாது செய்வார்கள்! ஸ்ரீ குமாரசாமிக்குத் தெரிந்தது என்னை! மனவஞ்சனையில்லாது கம்மிஷனர்களுடைய பொய் றிப்போட்டினாலே மயங்கி விட்ட புதுக்கவர்ணரிடத்திலே, ஸ்ரீ குமாரசுவாமி யாது செய்வார் ஆயினும் அந்த மகானுபாவர் ஒன்று செய்தார் அது என்னை! கொழும்புச் சட்ட நிருபண சபையிலே ஒரு கேள்வி கேட்டார். அது என்னை! "போன வருஷம் விளைவில்லாததினாலே இந்த வருஷம் விதை நெல்லுக்கு முட்டுப்படுகிற ஜனங்களுக்கு விதை நெல்லுக் கொடுக்கும் பொருட்டுக் கவர்ண்மெண்டு கட்டளை செய்ததன்றோ! அந்தக் கட்டளைப்படியே விதை நெல்லுக் கொடுக்கப்பட்டதா? எங்கெங்கே கொடுக்கப்பட்டது? அவ் விஷயத்திலே செய்து கொண்ட உடன்படிக்கை என்னை?" என்றது தான் அந்தக் கேள்வி! ஓகோ! இஃதன்றோ கேள்வி! இந்தக் கேள்வி! லக்ஷம் பொன் பெறுமே! எப்படி? விதை கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை நன்கறிந்த ஸ்ரீ குமாரசுவாமி துவைனந் துரையுடைய அநீதியையும் வன்கண்மையையும் பொய்மையையும் புதுக் கவர்ணருக்கு மெல்லென இனிது விளக்கித் திக்கற்ற ஏழைகளாகிய உங்களுடைய துன்பத்தை நீக்கும் உபாயம் இது என்று கண்டார்.

x x

உலகறிய முற்றேதி போட்டுப் பொய்ப்பற்றுச் சீட்டுகள் தலைமைக்காரர்கள் வாங்கிச் சேர்பார்களானல் சன்மார்க்கம் எப்படித் தலைப்படும்!!! யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி பொய் கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலிசு (College) அதற்குத் தலைவர் Principal) துவைனந்துரை; உபாத்தியாயர்கள் 'பாவந் தோன்றிய நாளையிற் றோன்றிய பாதகன்" ஆகிய முதலியார் முதலிய சிலவுத்தியோகத்தர்கள் அவர்கள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக்கூடங்கள் சில தலைமைக் காரர்களுடைய தானங்கள் இப்படியானால், யாழ்ப்பாணம் விரைவிலே தேவனுடைய சாபத்துக்குப் பாத்திரமாவதிற் சந்தேகமா!!!

—கருணை 1877.

ஸ்ரீமதி நாகலிங்கம் நாகம்மா அவர்கள்

சைவ பரிபாலன சபைத் தலைவரும் பிரபல வழக்கறிஞரும் சித்தாந்தவித்தகருமாகிய வட்டுக்கோட்டை திரு. வே. நாகலிங்கம் அவர்களின் பாரியார் நாகம்மா அவர்கள் 3-12-68 ல் அன்று திருக்கார்த்திகையில் தமது இல்லத்தில் சிவபதமடைந்தனர். கடவுள் பக்தி, விருந்தோம்பல், பதிபக்தி ஈகை இன்சொல் முதலிய பண்புகள் நிறைந்த அம்மையார் தம் கணவருடைய சமயத் தொண்டுக்கும் பொதுநலசேவைத்தொண்டுக்கும் உறுதுணையாக விருந்தவர்.

அம்மையாருடைய பிரிவினால் துயரடைந்துள்ள கணவருக்கும் புத்திரன் திரு. நா. ஞானசம்பந்தன் M. A அவர்களுக்கும் மற்றைய பிள்ளைகளுக்கும் உறவினருக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சங்கார கர்த்தாவே

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்னும், தண்ணீர்க்குடம் நிலை பெறுதல் அதனைத் தூக்கிச் செல்வோனது முயற்சியின்றி அமையாதவாறு, போலத் தோன்றிய பிரபஞ்சம் ஒடுங்குமளவும் நிலைபெறுதலும் முதல்வனது முயற்சியின்றி அமையாதென்றுணர்க, அம முயற்சியாவது தோன்றிய பிரபஞ்சம் ஒடுக்கம் வருங்காறும் நிலைபெறுக என்னும் ஆணையாகிய சங்கற்பமே யெனக் கொள்க.

(வளரும்)

"தீய பத்திரிகைக்குத் துணை செய்கிறவன் தீமையை விருத்தி செய்கிறவன்"—

"ஆசாரியரைச் சிவனடியாரைக் கோயிலினுள்ளே நமஸ்கரித்தல் குற்றம் என்று விலக்கப்பட்டது" (1877)

கெட்டி! கெட்டி!!

அதி பாதகமாகிய தேவத்திரவியாபகார முதலிய பல பாதகமுஞ் செய்கிற போலிச் சைவர்கள், அதிபாதகத்திற் றாழ்ந்த அதிபாதக துல்லியத்திற் றாழ்ந்த மகா பாதகத்திற் றாழ்ந்த மகாபாதக துல்லியத்திற் றாழ்ந்த உபபாதகத்திற் றாழ்ந்த உபபாதக துல்லியத்துள் ஒன்றாகிய புலாலுண்டல் செய்யுஞ் சூத்திரரில் உயர்ந்தவர்களாமோ? கெட்டி! கெட்டி!!

◆

ஈழதேசத்திலுள்ள திருப்புகழ் பெற்ற கதிர்காமத்திருந்த நரசிங்கராசனுக்குச் சோழராசாவின் புத்திரி வயிற்றிற் பிறந்தவனுக்குக் கண்டியிலிருந்தரசாண்ட பாலசிங்க மகாராசாவினாலே மதுரையினின்றும் வந்த ஓர் யாழ்ப்பாணன் பொருட்டுக்கொடுக்கப்பட்டது யாழ்ப்பாணம். அவ் வியாழ்ப்பாணம் மதுரையினின்றும் பாண்டியனாலனுப்பப்பட்ட சிங்கையாரிய சக்கிரவர்த்தியினாலும் அவன் வமிசத்தரசர்களாலும் ஆளப்பட்டது.

நல்லறிவுச் சுடர் கொளுத்தல்

சங்கார கர்த்தாவே முதற் கடவுள்

———0———

22-10-68 ல் அன்று சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மெய்கண்டதேவநாயனார் குருபூசைத் தினத்தில் சித்தாந்த பண்டிதர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.

முன்வளர்ச்சி—2

இறைவனது ஆணையால் இருவினைகள் இறத்தல் பிறத்தலைச் செய்யுமென்பதற்குப் பிரமாணம்: "உலகுடல் கரணங்காலம் உறுபலம் நியதி செய்தி, பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவதுண்பதானால், நிலவிடாதிவைதாம் சென்று நினைந்துயர் நிறுத்திக் கொள்ளா(து), அலகிலா அறிவனாணை ஆணைத்திடும் அருளினாலே"

ஆணையில் பிரிப்பின்றி நிற்பன் என்பதற்குப் பிரமாணம்:-

பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற் போல், அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் — சென்நிறத்தள், எந்நிறத்தளாயிருப்பள் எங்கள் சிவபதியும் அந்நிறத்தனாயிருப்பன் ஆங்கு"

சமபேதமாவது:- சமவாய சம்பந்தம் ஆகவே பிரிப்பின்றி நிற்கும் ஒற்றுமைச் சம்பந்தம்.

அவையே தானேயாய் என்பதனை இரட்டுற மொழிதலான் அவையேயாய்த் தானேயாய் எனக்கூறிப் பொருளுரைக்க.

வழிநூல் ஆசிரியரும் இக்கருத்தேபற்றி.

"உலகெலா மாகி வேறாய் உடனுமாய் - ஒளியாய் ஓங்கி, அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத், தலைவனாய் இவற்றின் தன்மை தனக் கெய்த லின்றித் தானே நிலவுசீர் அமலனாகிநின்றனன் நீங்கா தெங்கும்" என்றார்

ஆய்ப் புரிய நிற்கும் எனவே, அங்ஙனம் நின்று ஐந்தொழில் செய்யுங் கருத்தாவாதல் முதல்வனுக்கு இலக்கணமென்பதூஉம் ஆணையின் இருவினையின் எனவே தனது சிற்சத்தி துணைக்காரணம், இருவினை அதன் வழித்தாய துணைக்காரணம், இருவினையின் எனவே இருவினைக்குப் பற்றுக்கோடுண்மையும் பெறப்பட்டமையின், அது முதற்காரணமெண்பதூஉம், இருவினையிற் போக்கு வரவு புரிய எனவே, ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட்கேற்பப் பலவேறு வகைப்பட்டு விரியுமென்பதூஉம் போந்தவாறு உணர்க.

படைப்பு முதலிய ஐந்தனுள் ஒன்றற்கு வினைமுதலாதல் முதல்வனுக்கு இலக்கணமெனல் அமையுமேனும், ஏனையவற்றின் ஐயப்பாடு நீங்குதற்கு ஐந்தொழிற்கும் வினைமுதலாதல் இலக்கண மென்றார்.

தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருளெனனும் ஐந்தொழிலும் தூலம் சூக்குமம் அதி-சூக்குமம் என்று மூவகைப்படும்.

அவற்றுள், தூலமாகிய தோற்றமும் இறுதியும் பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமுமென்பது வெளிப்படை. நிலை தோன்றிய பிரபஞ்சம் ஒடுக்கம் வருங்காறும் நிலைபெறுதல் மறைப்பு அருள் என்பன பந்தமும் வீடும் என்று உணர்க.

அற்றேல், தோற்றமுதலியன போல நிலைத் தொழிலும் முதல்வன் காரியமென்றது என்னை? தோற்றிய பிரபஞ்சம் சங்கரிக்கப் புகுமளவுந் தானே நின்று நிலைபெறும். இதற்கு இறைவன் வேண்டா. தன்னொடு பகைவரால் அழிவின்றி நிலைபெறுத்துதல் அரசன் றொழிலானாற் போலப், பிரபஞ்சத்தைச் சங்கரிப்பார் வேறு உளராயினன்றே அவரைத் தடுத்துப் பிரபஞ்சத்தை நிலைபெறுத்துதல் வேண்டும். முதல்வன் சங்கரியாது நிற்குமளவும் வேறு சங்கரிப்பாரின்மையின், நிலைத் தொழில் முதல்வன் காரியம் அன்றாலோவெனின்,— நன்று சொன்னாய்!. ஒருகாலத்து ஒருங்கு தோன்றிய பொருள் இரண்டனுள் ஒன்று நெடுங்கால நிற்றலும், ஒன்று சிறிது கால நிற்றலுமாகிய நிலைவேறுபாடுண்மையின், இந்நிலை வேறுபாடு இதற்கேதுவாகிய வினை வேறுபாட்டானாயிற்றெனவும் அவற்றுட் சேதனப் பிரபஞ்சத்திற்குத் தம்முள் நிலை வேறுபாடு தத்தம் வினைவேறு பாட்டானாய தெனவுங் கொள்ளப்படும். அவ்விரு வேறு வினையும் முதல்வனாணையாலன்றி வாராமையான் நிலைத் தொழிலும் முதல்வனாற் செய்யப்படுங் காரியமாதல் அறிக.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 9188

யாழ்ப்பாணம்
நல்லூர் கோவில்வீதி
1 திருநாவுக்கரசு சச்சிதானந்தன்
2. பெண் பத்மாவதி
—வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் இருபாலை
1. ஐயம்பிள்ளை தருமலிங்கம்
2 பெண் சுந்தரம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B. 9188 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1969-ம ஆண்டு ஜனவரி (தை) மாதம் 8 ந் திகதி (8-1-69) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3440/—ம இதில் ரூபா 2000 க்கு 24-6-67 திகதி தொடக்கம் 25-11-67 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுப்பு வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 284-80 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க்கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை 'சந்தக்கையும் கொட்டுக்குளியும்' தெற்பரப்பு 6½ ம் வீடும் பயிர்களும் எல்லைகிழக்கு தருமலிங்கத்தின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும் வடக்கு பொன்னையா தம்பையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு கனகரத்தினம் பெண் மாணிக்கத்தின் ஆதனம். தெற்கு சேனாதராசா பெண் பறுபதபத்தினியின் உருமைக்காறருக்குரிய ஆதனம் இதடங்கலும். முற் பதிவு K 209/103.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 10-11-1968
எம் 390. 6-12-68.

யாழ்ப்பாணம்
— ஐக்கிய இலாப நிதி —
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 6—12—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

நாவலர் சொற் கேளீர்

புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

(சைவவினுவிடை முதற் புத்தகம்)

கோட்டு விற்பனவு விளம்பரம்

வைரவன் கந்தன் – மட்டுவில் தெற்கு சாவகச்சேரி
—வழக்காளி

இல M.B, 7602 எதிராக

1. சிற்றம்பலம் நடராசாவும் பெண்
2, சிவகாமி அம்பாள் – புத்தூர் தெற்கு
3. ஆறுமுகம் வேலாயுதபிள்ளை – சிறுப்பிட்டி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 7602-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக் காணிகளை 1968- ம் மார்கழி மாதம் 30-ந் திகதி (30 12-68) திங்கள்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 16, 200- 9-8-65 தொடக்கம் 22-3-66 வரைக்கும் ரூபா 10, 000-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்குமளவும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 530/20 சதம். (முதலை ரூபா 5,000/ 1,500/– செலவில் ரூபா 200/– கொடுக்கப்பட்டுள்ளது.)

ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற்பற்று, புத்தூர் தெற்கிறை "விரிவாணடிவயல்" இதன்விஸ்தீரணம் நெற்பரப்பு 47¾. எல்லை கிழக்கு கந்தையா மகன் நாகரத்தினம்பாவின் நிலம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு சிற்றம்பலம் நடராசாவின் நிலம், இதுமுழுவதும் பதிவு K. 208/210.

2. ஷை புத்தூர் கோவிற்பற்று அச்செழு இறை "ஆவரங்கவட்டி" இதன்விஸ்தீரணம் நிலப்பரப்பு 21½. எல்லை கிழக்கு மயில்வாகனத்தின் உரிமையாளர்களின் நிலம் வடக்கு பூதத்தம்பியின் உரிமையாளர்களின் நிலம் மேற்கு அச்சுவேலி சிறுப்பிட்டி கிராமஎல்லைகள். தெற்கு கந்தரின் உரிமையாளர்களின் நிலம். இது முழுவதும் பதிவு K. 222/155

3. ஷை புத்தூர் கோவிற்பற்று அச்செழு இறை "சுள்சகும்பாறை" இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 20. எல்லை கிழக்கு வன்னியப்பிள்ளையின் உரிமையாளர்களின் நிலம், வடக்கு சின்னப்பிள்ளையும் மனுபேரின் உரிமையாளர்களின் நிலம், மேற்கு சிற்றம்பலத்தின் உரிமையாளர்களின் நிலம். தெற்கு தாமரின் உரிமையாளர்களின் நிலம். இதுமுழுவதும் பதிவு K. 222/156

4. ஷை அச்சுவேலி கோவிற்பற்று, அச்சுவேலி தெற்கிறை "முதிரைகாதையட்டி" இதன விஸ்தீரண நிலப்பரப்பு 10, எல்லை கிழக்கு சின்னையா பெண் வள்ளிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய நிலம், வடக்கு கதிர்காமர் சின்னத்தம்பியின் நிலம், மேற்கு பண்படுத்தாத நிலம், தெற்கு கந்தர் பெண் கதிராசிக்கும் பங்காளர்களுக்கு முரிய நிலம் இது முழுவதும பதிவு K, 57/104

வே. கோபாலபிள்ளை,
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 18-11-68 எம் 297 6—12—68

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 7522

காசிநாதர் கந்தையா கனகசபையும் பெண் சிவமணியும் களபூமி காரைநகர்
—வழக்காளி

வயிரவநாதர் கந்தர் முருகையாவும் பெண் சரஸ்வதியும் வண்ணார் பண்ணை தென்கிழக்கு யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M. B. 7522-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1969-ம் வருடம் மார்கழி மாதம் 15-ம் திகதி ஞயிற்றுக் கிழமை முற் பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா 15780-ம் 17-12-65 தொடக்கம் ரூபாய் 15780 க்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவுரூபாய் 1063 38 இம் முழுததொகையிலும் ரூபா 12000 கழித்தது மிகுதிப் பணம் முழுவதும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வண்ணார் பண்ணை கோவிற்பற்று தென்கிழக்கு காக்கையன் வளவு யாணிக்கன்காடு 1, 1/2 பரப்பு ஆனல் M. அலோசியஸ் உத்தரவுபெற்ற உலாந்தாவின் 19-10-1946 திகதி கொண்ட 1228 ம் இலக்க படத்தின் படிக்கு 1 பரப்பும் 7, 1/2 குளியும் இதுள் அடங்கிய வீடும் கிணறும் ஏசினியும் மற்றும்யாவும் இதற்கு எல்லை கிழக்கு கைஒழுங்கை வடக்கு விசுவநாதர் கந்தையாவின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு செல்லையா ஆறுமுகத்தின் மகள் இரத்தினத்தின் ஆதனம்.

பதிவு இல, D 291/276

மேற்காட்டிய கோவில்மற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு அவரன் தலக்கை என்னும் ஆதனம் 3 பரப்பு 4. 6/10 குளியும் கிணறும் வான்பயிர்களும மற்றும் சகலதும் இதற்கு எல்லை கிழக்கு - செல்லத்துரை கைம்பெண் பாய்க்கியத்தின் ஆதனம் வடக்கு வெள்ளவாய்க்கால் மேற்கு சுப்பிரமணியம் பெண் சாதி பரமேஸ்வரியின் ஆதனம் தெற்கு ரோட்டு.
பதிவு இல. D 280/41

சோ. நரசிங்கம்
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்
தொல்புரம்

12-10-68
எம். 298
6-12-68